**தலைப்பு 226 – குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 226 – குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 நவம்பர் 18 ஆம் திகதி கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,807.28 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,372.28 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 435.00 மில்லியன் அதாவது 24.07 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 989.38 | 966.08 | 23.30 | 2.36 |
| மூலதனம் | 817.90 | 406.20 | 411.70 | 50.34 |
| மொத்தம் | **1,807.28** | **1,372.28** | **435.00** | **24.07** |

**2.2 வருமானக் கணக்கு**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்கான 20.03.02.07 ஆம் வருமானக் குறியீட்டிற்காக ரூபா 8,107.25 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 10,107.77 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 2,000.52 மில்லியனால் அதாவது 24.68 சதவீதத்தினால் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

**2.3 முற்பணக் கணக்கு**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 22601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 33.52 | 21.94 | 27.52 | 29.76 | 154.00 | 119.01 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கீழான 7002/0000/00/0032/0015/000 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் ரூபா 41.81 மில்லியனாக இருந்தது.

**2.5 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழான 03 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 0.42 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா மில்லியன்** |
| 6000/0000/00/0001/0084/000 | 0.10 |
| 6000/0000/00/0002/0112/000 | 0.11 |
| 6000/0000/00/0016/0059/000 | 0.21 |
| **மொத்தம்** | **0.42** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | கணனி, துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (ii) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (iii) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (iv) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (v) | இருப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 751 |

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

### 3.2.1 பாதீட்டு முரண்

13 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய ஏற்பாட்டில் 11 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 3.3 பொது வைப்புக் கணக்கு

2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 109,500 கூட்டுத்தொகையான 02 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 வருமானக் கணக்கு

திணைக்களத்தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.03.02.07 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் வருமான மதிப்பீட்டை தயாரித்தல், வருமானங்களை சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற பணிகள் பொறுப்பளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட

கணக்காய்வு தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருமானக் காசேட்டின் பிரகாரம் பிரசை பிரிவின் வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 849.81 மில்லியனாக இருந்ததுடன் திணைக்கள கணனி முறைமையின் பிரகாரம் அவ்வருமானம் ரூபா 849.99 மில்லியனாக இருந்தமையால் ரூபா 181,430 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) வருமானக் காசேட்டின் படி வீசா இன்றி தங்கியிருந்தவர்களிடமிருந்து அறவிடப்பட்ட வருமானம் மற்றும் திணைக்களத்தின் கணனி முறைமையின் பிரகாரம் வீசா இன்றி தங்கியிருந்தவர்களிடமிருந்து அறவிடப்பட்ட வருமானத்திற்கு இடையே ரூபா 206,814 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(இ) இரட்டை பிரஜாவுரிமை வழங்குவதற்காக நபரொருவரிடமிருந்து கூடுதலாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 400,000 தொகை மீளாய்வாண்டின் போது வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

22601 ஆம் விட இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் படி அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 545,368 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 11 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வருவதுடன் அந்த நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) திணைக்களத்தினால் கடன் வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகளைப் பின்பற்றாமல் ரூபா 836,099 ஆன கடன் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

**3.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கையேடு | | |
| (i) நிதிப் பிரமாணம் 94(1) | 25,748,085 | 13 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டை மிகைத்து ரூபா 25.75 மில்லியன் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |

(ஆ) அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவை

| | | | |
|---|---|---|---|
| (i) 4.2.3 வழிகாட்டல் | | | விலை விபரங்கள் திறக்கப்பட்டு 02 வாரங்களில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அவர்களின் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் வீசா ஸ்டிகர் அச்சிடல் இயந்திரம் கொள்வனவிற்குரிய பெறுகை கேள்வி திறக்கப்பட்டு 24 நாட்கள் தாமதத்தின் பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (ii) 6.2.2 வழிகாட்டல் | - | | திணைக்களத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது மாடியின் கணனி வலையமைப்பு சேவைக்காக கூறுவிலை சமர்ப்பிப்பதற்கு குறைந்தது 7 நாட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்காக 1 நாள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) 8.9.1(அ)வழிகாட்டல் | 8,562,457 | | பொருட்கள் மற்றும் சேவைகளின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 500,000 ஐ விஞ்சும் போது முறையான ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது மாடியினதும் நவீனமயப்படுத்தல் மற்றும் வலையமைப்பு ஆகிய ஒப்பந்தக்களுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மினுவங்கொடை தடுப்பு நிலைய நிர்மாணத்தின் பெறுகை செயற்பாடுகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடவுச்சீட்டு வழங்கும் செயற்பாட்டிற்கு தரவுகளை உள்ளடக்கும் செயற்திட்டத்திற்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்திற்கு 1827 புகைப்பட நிலையங்கள் பதிவிற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தன. அதில் 1690 புகைப்பட நிலையங்கள் பணத்தைச் செலுத்தி தமது பதிவினை உறுதிப்படுத்தியிருந்தது. அதில் தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்த 1154 புகைப்பட நிலையங்களில் 988 இன் அவதானிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு திணைக்களத்துடன் இணையவழியில் (Online) முறைமையின் கீழ் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 166 புகைப்பட நிலையங்கள் 2016 ஆம் ஆண்டின் போது கண்காணிப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தயார் செய்யப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையில் 988 அல்லது 58 சதவீதம் சேவை வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. 42 சதவீதமானவை இணைய வழி முறையில் தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.8 நட்டங்களும் சேதங்களும்

2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை இயந்திர பிழைகள், அச்சீட்டுப் பிழைகள், லெமினேடிங் பிழைகள் மற்றும் ஏனைய காரணங்கள் அடிப்படையில் இரத்துச் செய்யப்பட்ட கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை 4,818 ஆக இருந்ததுடன் அதன் கிரயம் அண்ணளவாக ரூபா 2.4 மில்லியனாக இருந்நது.

## 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மினுவங்கொடை கலகெதர தடுப்பு நிலையத்தின் காணி கையேற்றல் மற்றும் அதற்குரிய நிர்மாணங்களுக்காக ரூபா 3,927,479 தொகை திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் பின்னர் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

## 3.10 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளுக்காக பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2010<br>2011 | 6.5(அ)<br>6.7 | திணைக்களத்தின் 7.6.7 பீ கணனி அறிக்கையின் பிரகாரம் 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வீசா இல்லாமல் நாட்டில் தங்கியிருந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 13,192 ஆக இருந்தது. அவ்வாறு தங்கியிருந்தவர்களை சுற்றி வளைப்பதற்கும் கைது செய்வதற்கும் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளின் போது 225 பேர் வரை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அது வீசா இல்லாமல் தங்கியிருந்தவர்களின் எண்ணிக்கையில் 2 சதவீதமாகும். |

## 3.11 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 60 | 56 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 398 | 357 | 41 |
| (iii) | இரண்டாம் நிலை | 428 | 373 | 55 |
| (iv) | ஆரம்ப நிலை | 134 | 132 | 02 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 10 | 05 | 05 |
| | மொத்தம் | 1,030 | 923 | 107 |